# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097171

1. District மாவட்டம் : புதுக்கோட்டை   PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு   Year ஆண்டு:   FIR No. மு.த.அ. எண்: 02/18   Date நாள்: 11-05-2018

2. (i) Act சட்டம்: IPC and Prevention of   Sections பிரிவுகள்: 408, 409, 468, 471,
   (ii) Act சட்டம்: Corruption Act - 1988   Sections பிரிவுகள்: 477-A r/w 109 IPC and 13(1)(c) r/w 13(2)
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: of the Prevention of Corruption Act-1988.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 2015   Date to : நாள் வரை 2017
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04-05-2017   Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11-05-2018   Time : நேரம் 11.00 hrs

4. Type of Information : Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தொடக்கக் கட்ட விசாரணை ரிப்போர்ட் (computer typing)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை 3. கி. மீ. கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station then the Name of P S   District
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. மனோகரன்   (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் L. சிவானந்தம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965   (d) Nationality நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துறை கண்காணிப்பாளர்   (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, புதுக்கோட்டை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திருமதி. சி. உமாராணி, முதல்வர்/விடுதி காப்பாளர், அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை மாவட்டம். 2. திரு. பா. மதிபாகரன், உதவி பேராசிரியர் மற்றும் வார்டு துணைக் காப்பாளர். 3. திரு. ப. வீரக்குமார், பதிவறை எழுத்தர் மற்றும் வார்டு பொறுப்பு எழுத்தர், அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தொடக்கக்கட்ட விசாரணை செய்யப்பட்டு உத்தரவின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதால் கால தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று 11.05.2018ஆம் தேதி காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் S.மனோகரன் ஆகிய நான் அலுவலகத்தில் பொறுப்பில் இருந்த போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி திருமதி.R.பங்கஜம், காவல் ஆய்வாளர் சமர்ப்பித்த துவக்ககட்ட விசாரணை எண். PE:174/2017/EDN/PK அறிக்கையை பரிசீலினை செய்து இவ்வழக்கை பதிவு செய்த விபரம் பின்வருமாறு:- புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை அரசு கல்வியியல் கல்லூரியில் 2015–2017ஆம் கல்வியாண்டில் 95 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும், அதில் 57 மாணவர்கள் விடுதியில் தங்கி வருவதாகவும், விடுதி மாணவர்கள் ஒவ்வொருவரும் வருடத்திற்கு ரூ.8,000/– வீதம் முன் பணத் தொகை செலுத்தியதாகவும், அது தவிர உணவு மற்றும் தங்கும் அறைக்கு தனியாக கட்டணம் செலுத்தியதாகவும், மேற்படி முன்பணத் தொகையில் மாணவர்கள் பயன்படுத்தும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Y. Chandra Mouleeswari Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் Y. சந்திரமௌலீஸ்வரி பதவி ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Tamil 11/05/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11/05/2018 13.00 hrs

Name: பெயர் S. MANOHARAN
Rank: நிலை SP (V&AC) No. எண் .........
Pudukkottai

தண்ணீர், மின்சாரம் மற்றும் விடுதி காவலர் ஊதியம் ஆகியவற்றிற்கு செலவிடப்பட்டதாகவும், அதில் 2015–2016ஆம் கல்வி ஆண்டில் 12.10.2015–ஆம் தேதி கல்லூரி திறக்கப்பட்ட நிலையில் அக்டோபர் 2015 முதல் ஏப்ரல் 2016 வரையிலான மாதங்களில் 57 விடுதி மாணவர்கள் செலுத்திய மொத்தத் தொகை ரூ.6,52,400/–இல் உணவுக் கட்டணமாக ரூ.6,06,452/–ஐ விடுதி ஒப்பந்ததாரருக்கு கொடுத்ததாகவும், மீதமுள்ள தொகை ரூ.45,948/–ஐ மீண்டும் மாணவர்களுக்கு திருப்பி கொடுக்காமலும், அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தாமல் கல்லூரி முதல்வர்/விடுதி காப்பாளர் திருமதி.சு.உமாராணி ஏமாற்றி விட்டதாகவும் தொடர்ந்து 2015–2016–ஆம் கல்வியாண்டில் விடுதி காவலர் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு சம்பளமாக செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்கான தொகை கொடுத்ததாக ரூ.55,150/–(ரூ.21,550+ரூ.33,600)–க்கு பொய்யான கணக்கு தயாரித்து கு.சா.அ–1 திருமதி.சு.உமாராணி ஏமாற்றியுள்ளதாகவும், தொடர்ந்து 2015–2016ஆம் கல்வியாண்டில் குடிநீர்க் கட்டணம் மற்றும் மின்சாரக் கட்டணம் ரூ.17,613/–ஐ மாணவர்களின் முன் பணத் தொகையில் செலுத்தியதாகவும், அந்த தொகையை விடுதி உணவு ஒப்பந்ததாரர்களான திரு.சீனிவாசன் மற்றும் திருமதி.மகாராணி ஆகியோரிடம் தனியாக பெற்றதாகவும், மீண்டும் மேற்படி தொகையை மாணவர்களின் முன்பணத் தொகையில் செலுத்தாமல் கு.சா.அ–1 திருமதி.சு.உமாராணி ஏமாற்றியுள்ளது தொடர்பான குற்றச்சாட்டுகளை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் எதிரி 1.திருமதி.சு.உமாராணி மீது துவக்கக்கட்ட விசாரணை எண். PE:174/2017/EDN/PK-ன்படி திருமதி.R.பங்கஜம் காவல் ஆய்வாளர், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு என்பவரால் 04.05.2017–இல் துவக்கக்கட்ட விசாரணை பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட துவக்கக்கட்ட விசாரணை முடிவில் கீழ்க்கண்ட நம்பத்தகுந்த குற்றமுறு செய்கைகள் தெரியவந்துள்ளதாக காவல் ஆய்வாளர் திருமதி.R.பங்கஜம் துவக்கக்கட்ட அறிக்கையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அதன்படி, புதுக்கோட்டை அரசு கல்வியியல் கல்லூரியில் 2015–2017ஆம் கல்வியாண்டில் பயின்ற 57 விடுதி மாணவர்களின் முன் பணத்தொகையில் உணவுக் கட்டணம், விடுதி காவலர் மற்றும் துப்புரவு தொழிலாளர்களுக்கான சம்பளத் தொகை, நிர்வாக செலவினங்கள் உட்பட மீதமுள்ள தொகை விடுதி மாணவர்களுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளதற்கான கணக்கு விபரங்கள் பராமரிக்கப்பட்டுள்ளதும், மேலும் கு.சா.அ–1 திருமதி.சு.உமாராணி மீதான

இப்பிரதான குற்ற நிகழ்வோடு தொடர்புடைய இடைநிகழ் குற்றச்சாட்டாக உணவு ஒப்பந்ததாரர் திரு.சீனிவாசன் 30.05.2015 நாளிட்ட ஒப்பந்தப்படி 3 தினங்களுக்குள் காப்புத்தொகை ரூ.1,00,000/- கட்டியிருக்க வேண்டும். அவ்வாறு ரூ.1,00,000/- மேற்படி சீனிவாசன் கட்டியதற்கான ஆவணப்பதிவுகள் விடுதி சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் இல்லை. ஒப்பந்தப்படி டேவணித்தொகை ரூ.10,000/- மட்டும் மேற்படி சீனிவாசன் செலுத்தியுள்ளார். அவ்வாறு காப்புத்தொகை கட்டாத நிலையில் அவருக்குள்ள ஒப்பந்தத்தை மீறி 30.10.2015 முதல் 10.03.2016 வரையிலான மாதங்களில் உணவுக்கூடம் நடத்த கு.சா.அ-1 திருமதி.சு.உமாராணி, முதல்வர் / விடுதி காப்பாளர், கு.சா.அ-2 திரு.பா.பிரபாகரன், உதவி பேராசிரியர் மற்றும் விடுதி துணைக்காப்பாளர் கு.சா.அ-3 திரு.ப.இரவிக்குமார், பதிவறை எழுத்தர் ஆகியோர் அனுமதித்தும், 10.03.2016-ஆம் தேதி ஒப்பந்ததாரர் திரு.சீனிவாசன் அவரது ஒப்பந்தத்தை பாதியிலேயே முடித்துக் கொள்வதாக கூறியதன் அடிப்படையில் கு.சா.அ-2 திரு.பா.பிரபாகரன், உதவிப் பேராசிரியர்/விடுதி துணைக் காப்பாளர் மற்றும் கு.சா.அ-3 திரு.ப.இரவிக்குமார், பதிவறை எழுத்தர்/விடுதி பகுதி நேர எழுத்தர் ஆகியோர் மேற்படி சீனிவாசன் காப்புத் தொகை ரூ.1,00,000/- கட்டியதாக பொய் ஆவணம் தயார் செய்து கட்டாத மேற்படி காப்புத் தொகை ரூ.1,00,000/- மற்றும் உணவுக்கூடம் மார்ச் 2016-இல் 10 நாட்கள் நடத்திய வகையில் ரூ.42,042/- ஆக மொத்தம் ரூ.1,42,042/- ஆக கூடுதலாக தொகை கணக்கிடப்பட்டு அதில் உணவுக்கூடத்திற்கும், மின் கட்டணம் மற்றும் குடிநீர்க் கட்டணம் நிலுவைத் தொகையாக ரூ.5,100/-ஐ பிடித்தம் செய்து மீதமுள்ள தொகை ரூ.1,36,942/-ஐ வழங்கக்கோரி கேட்புப் பதிவேட்டில் பொய்யான ஆவணம் புனைந்து பொய் கணக்கு எழுதி கு.சா.அ-1 திருமதி.சு.உமாராணி-க்கு வைக்கப்பட்டிருந்த கணக்கு விபரங்களை கு.சா.அ-1 முறையாக சரி பார்க்காமலும், பரிசீலனை செய்யாமலும், நிர்வாக அரசுப் பணியில் நேர்மையின்றி செயல்பட்டு விடுதி நடைமுறையை மீறியும் உள்நோக்கம் கொண்டு, விடுதி இருப்பு முன்பணத் தொகை 04.04.2016-இன்படி ரூ.2,14,376/-இல் ரூ.1,36,942/-ஐ ஒப்பந்ததாரர் சீனிவாசனுக்கு காசோலை எண்.106973 நாள் 04.04.2016 அன்று மேற்படி தொகையை அனுமதித்து 05.04.2016இல் ரூ.1,36,942/-க்கு காசோலை வழங்கப்பட்டு அக்காசோலையை ஒப்பந்ததாரர் திரு.சீனிவாசன் 05.04.2016-இல் பெற்றுச் சென்றுள்ளார். மேற்படி ஆவணப் பதிவுகளை பார்வையிட்ட கு.சா.அ-2 திரு.பிரபாகரனும் முறையாக ஆவணங்களை சரிப்பார்க்காமலும், கணக்கு விபரங்களை பரிசீலனை செய்யாமலும், தனது அரசுப் பணியில் நேர்மையின்றி செயல்பட்டும் மேற்படி துணை காப்பாளர், விடுதி ரொக்கப்பதிவேடு ஆவணத்தில் வேண்டுமென்றே 06.04.2016 இல் கையொப்பம் செய்துள்ளார். எனவே கு.சா.அ-1 முதல் 3 வரையிலானவர்கள் கல்லூரி விடுதி நிர்வாக

நடைமுறை விதிகளை மீறி விடுதி கணக்கு இருப்புத் தொகையை விடுதி மாணவர்களுக்கும், விடுதி நிர்வாக செலவினங்களுக்கும் செலவிடாமல் தங்களது அரசுப் பணியில் நேர்மையற்ற முறையில் உள்நோக்கம் கொண்டு செயல்பட்டு தனிநபரான உணவு ஒப்பந்ததாரர் திரு.சீனிவாசனுக்கு திரும்ப வழங்கவேண்டிய டேவணித்தொகை ரூ.10,000/-ஐ கழித்து மீதமுள்ள தொகை ரூ.90,000/-த்தை கூடுதலாக வழங்கி, விடுதி கணக்கு இருப்புத் தொகையில் ரூ.90,000/-ம் அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு எதிரி 1.திருமதி.சு.உமாராணி, எதிரி 2.திரு.பா.பிரபாகரன் மற்றும் எதிரி 3.திரு.ப.இரவிக்குமார் ஆகியோர் அரசு ஊழியராக இருந்து கொண்டு மூவரும் ஒன்று சேர்ந்து கல்லூரி விடுதி இருப்புத் தொகையில் குற்றமுறு எண்ணத்தில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் நிர்வாக நடைமுறையை மீறி தெரிந்தே விடுதி ஒப்பந்ததாரர் திரு.வீ.சீனிவாசன் (தனிநபர்) ஒப்பந்தப்படியான காப்புத் தொகை ரூ.1,00,000/-கட்டாத நிலையில் கட்டியதாக அனுமானம் கொண்டு பொய்யான ஆவணம் தயார் செய்து பொய்யான ஆவணம் என தெரிந்தே ரூ.90,000/-ஐ ஒப்பந்தகாரருக்கு வழங்கி தங்களது அலுவலகப்பணியில் நேர்மையற்ற முறையில் செயல்பட்டு விடுதி இருப்புத் தொகையில் ரூ.90,000/- அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தி குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்துள்ளார்கள் என்று துவக்கக்கட்ட விசாரணை அறிக்கையின் முடிவில் தெரியவருவதாலும் குற்றம் செய்து இருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாலும் எதிரிகள் 1)திருமதி.சு.உமாராணி முதல்வர் மற்றும் காப்பாளர், அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை. 2)திரு.பா.பிரபாகரன், உதவிப் பேராசிரியர் மற்றும் விடுதி துணைக் காப்பாளர், அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை. 3)திரு.ப.இரவிக்குமார் பதிவறை எழுத்தர் மற்றும் விடுதி பகுதி நேர எழுத்தர் அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை ஆகியோர்கள் மீது இன்று 11.05.2018 காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.02/2018 பிரிவுகள் 408, 409, 468, 471, 477-A r/w 109 IPC and 13 (1) (c) r/w 13 (2) of the Prevention of Corruption Act-1988-இன்படி என்னால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. S. Tamil 11/05/2018

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், கனம் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், இதன் ஒரு நகலை நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

S. Tamil 11/05/2018
DSP (V&AC)
Pudukkottai